**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**CC.No. 131/2022**

| | |
|---|---|
| Deposition of Witness for PW | : 1 |
| Name (திரு/திருமதி) | : தனம் |
| Father's Name/ Husband's Name | : ரவி |
| Village & Taluk | : அவலூர்பேட்டை |
| Calling | : கூலி |
| Age | : 40 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.03.2026**

(எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு 317/ 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**முதல் விசாரணை :**

1. இவ்வழக்கு விபத்தில் இறந்துபோன பாலமுருகன் எனது மகன் ஆவார். பட்டியல் சாட்சி–2 முருகன் எனது நாத்தனார் மகன் ஆவார். சுமார் 4 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நான் வீட்டில் இருந்தபோது மாலை சுமார் 06.45 மணிக்கு எங்கள் ஊரை சேர்ந்த ஒரு நபர் எனக்கு போன் செய்து எனது மகன் மற்றும் நாத்தனார் மகன் ஆகியோர்கள் செவரப்பூண்டியில் இருந்து வீட்டிற்கு இரு சக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்ததாகவும், அவலூர்பேட்டை சைதானிபி கல்லூரி அருகே கரும்பு லோடு ஏற்றி வந்த டிராக்டர் மோதி மாலை சுமார் 06.45 மணியளவில் விபத்து ஏற்பட்டதாக எனக்கு தகவல் சொன்னார். தகவல் அறிந்து நான் சம்பவ இடத்திற்கு சென்றேன். அங்கு எனது மகன் மற்றும் நாத்தனார் மகனை பார்த்தேன் எனது மகனுக்கு மார்பு பகுதியில் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. காயமடைந்த எனது மகனை திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றோம். அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றபோது வழியிலேயே எனது மகன் இறந்துவிட்டார். இவ்விபத்து தொடர்பாக அவலூர்பேட்டை காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான் அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். **மேற்படி புகார் மனு அ.சா.ஆ.1. ஆக குறியீடு செய்யப்படுகிறது**. காவலர்கள் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

போதிய வாய்ப்பளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படாததால் மேற்படி சாட்சியத்தின் சாட்சியம் முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/–B.Vidhya

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

செஞ்சி.

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**CC.No. 131/2022**

| | |
|---|---|
| Deposition of Witness for PW | : 2 |
| Name (திரு/திருமதி) | : முருகன் |
| Father's Name/ Husband's Name | : கோபால் |
| Village & Taluk | : துரிஞ்சாபுரம் |
| Calling | : கூலி |
| Age | : 41 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.03.2026**

(எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு 317/ 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**முதல் விசாரணை :**

1. இவ்வழக்கு விபத்தில் இறந்துபோன பாலமுருகன் எனது மைத்துனர் ஆவார். அ.சா.1 தனம் எனது தங்கை ஆவார். சுமார் 4 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் செவரப்பூண்டியில் இருந்து அவலூர்பேட்டைக்கு எனக்கு சொந்தமான இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தோம். அன்றைய தினம் வாகனத்தை பாலமுருகன் ஓட்டினார் நான் பின்னால் அமர்ந்து பயணித்தேன். செவரப்பூண்டி கூட்ரோடு அருகே உள்ள ஒரு கல்லூரியிடம் மாலை சுமார் 07.00 மணியளவில் எங்களுக்கு எதிர் திசையில் வந்த கரும்பு லோடுடன் கூடிய டிராக்டர் ஒன்று அவலூர்பேட்டையில் இருந்துபென்னாத்துார் நோக்கி வந்து கொண்டிருந்தது மேற்படி டிராக்டரின் ஓட்டுநர் வாகனத்தை திடீரென திருப்பியதால் எங்கள் மீது டிராக்டர் மோதி விபத்து ஏற்பட்டது. எனக்கு தோள்பட்டையில் காயம் ஏற்பட்டது. பாலமுருகனுக்கு மார்பில் பலத்த காயம் ஏற்பட்டது. காயமடைந்த அவரை திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு அவரச ஊர்தியில் அழைத்து சென்றோம். பின்னிட்டு அவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். விபத்து ஏற்படுத்திய டிராக்டரின் பதிவு எண் மற்றும் அதன் ஓட்டுநரை நான் கவனிக்கவில்லை. ஓட்டுநரை பார்த்தாலும் என்னால் அடையாளம் காட்ட இயலாது. காவலர்கள் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

போதிய வாய்ப்பளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படாததால் மேற்படி சாட்சியத்தின் சாட்சியம் முடிக்கப்பட்டது.,

**மறு விசாரணை :** இல்லை.

| |
|---|
| என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது. |
| Sd/-B.Vidhya |
| குற்றவியல் நீதித்துறை நடுவர், |
| செஞ்சி. |

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**CC.No. 131/2022**

| | |
|---|---|
| Deposition of Witness for PW | : 3 |
| Name (திரு/திருமதி) | : ராஜேந்திரன் |
| Father's Name/ Husband's Name | : கணேசன் |
| Village & Taluk | : அவலூர்பேட்டை |
| Calling | : விவசாயம் |
| Age | : 56 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.03.2026**

(எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு 317/ 355 BNSS-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**முதல் விசாரணை :**

1. இவ்வழக்கு விபத்தில் இறந்துபோன பாலமுருகன் எனது பேரன் ஆவார். அ.சா.1 தனம் பாலமுருகனின் தாய் ஆவார். அ.சா.2 முருகன் அ.சா.1ன் தம்பி ஆவார். சுமார் 4 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நான் வீட்டில் இருந்தபோது இரவு சுமார் 09.00 மணிக்கு எனது உறவினர் ஒருவர் எனக்கு போன் செய்து பாலமுருகன் மற்றும் முருகன் ஆகியோர்கள் இரு சக்கர வாகனத்தில் செவரப்பூண்டியில் இருந்து அவலூர்பேட்டைக்கு வந்து கொண்டிருந்ததாகவும், சைதானிபி கல்லூரி அருகே கரும்பு லோடு ஏற்றி வந்த டிராக்டர் மோதி மாலை சுமார் 07.00 மணியளவில் விபத்து ஏற்பட்டதாக எனக்கு தகவல் சொன்னார். அதன் பின்னிட்டு பாலமுருகன் இறந்துவிட்டதாக தகவல் வந்தது. காவலர்கள் என்னை விசாரித்தனர்.**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

போதிய வாய்ப்பளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படாததால் மேற்படி சாட்சியத்தின் சாட்சியம் முடிக்கப்பட்டது.,

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/-B.Vidhya

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

செஞ்சி.

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**CC.No. 131/2022**

| | |
|---|---|
| Deposition of Witness for PW | : 4 |
| Name (திரு/திருமதி) | : சிவா |
| Father's Name/ Husband's Name | : முத்து |
| Village & Taluk | : அவலூர்பேட்டை |
| Calling | : விவசாயம் |
| Age | : 54 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.03.2026**

(எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு 317/ 355 BNSS-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**முதல் விசாரணை :**

1. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2 வது சாட்சியம் கையொப்பம் என்னுடையதுதான். சுமார் 4 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் அவலூர்பேட்டை காவலர்கள் சைதானிபி கல்லூரி அருகே மாலை சுமார் 07.00 மணியளவில் பாலமுருகன் என்பவருக்கு ஏற்பட்ட விபத்து வழக்கு சம்பந்தமாக விசாரித்து படம் வரைந்து எழுதி கையொப்பம் பெற்றார். அப்போது நான் மேற்படி கையொப்பத்தை செய்தேன். மேற்படி பார்வை மகசர் **அ.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** காவலர்கள் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. போதிய வாய்ப்பளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படாததால் மேற்படி சாட்சியத்தின் சாட்சியம் முடிக்கப்பட்டது.,

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/-B.Vidhya

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

செஞ்சி.